அலை - 1

"நான் இல்லாம நீ எங்கேடா போயிருவ?" என்று கேட்டவள் ராதா. வயது அதிகமில்லை ஐந்து தான். முதலாம் வகுப்புப் படிக்கின்றாள். கேட்டது நவீனைப் பார்த்து. அவனும் அவளும் கூடப் படிப்பவர்கள்.

அரையாண்டுத் தேர்வு இதோ இன்று தான் முடிந்திருக்கின்றது. சென்னையிலிருந்து விடுமுறைக்குத் தன் அம்மாவின் அப்பா இருக்கும் கோயம்புத்தூருக்குப் போவதாகச் சொல்லும் போது தான் இந்த வார்த்தை ராதாவிடம் இருந்து வந்தது! இருவரில் நவீன் தான் சுட்டி. அவன் அம்மா ராணியும் அப்பா கோவிந்தனும் இருவரும் சேர்ந்து ஏதோ வியாபாரம் செய்கின்றார்கள். ஒரே பிள்ளை. வசதிக்குப் பஞ்சமில்லை.

ராதாவின் அப்பா தினேஷ் வெளிநாட்டில் இருக்கின்றார். பணம் மட்டும் அனுப்புகின்றார் என்று தெரியும். அம்மா மங்கையுடனும் மங்கையின் பெற்றோருடனும் ராதா சென்னையில் வளர்கின்றாள். தினமும் இரவில் அப்பாவுடன் போனில் கொஞ்சுவதோடு சரி.

"அந்தக் கோயம்புத்தூர்ல என்னடா இருக்கு? எதுக்கு அங்கே போற?" - இது ராதா. "ஹாங்! நீ மட்டும் உங்க தாத்தாவோட இருப்ப, நான் இருக்கக் கூடாதா? அதான் லீவுக்கு எங்க தாத்தாவோட இருக்கப் போறோம் நானும் எங்கம்மாவும்" - இது நவீன். "ஹை! எங்க தாத்தா எப்பவும் எங்க கூடத் தான் இருக்காரு. உங்க தாத்தா உன்னைப் பாக்க இங்க வர மாட்டாரோ?" என்றாள் ராதா. "நிசம்மாவே போகத் தான் போறியா? என்னைக்கு திரும்ப வருவ?" என்றாள். "ஆமா. அங்கே எங்க பெரியம்மா இருக்காங்களே! நான் என்ன கேட்டாலும் வாங்கித் தருவாங்க" என்றான் நவீன். "நியூ இயர் அங்கே தான் கொண்டாடப் போறோம். ஸ்கூல் ஆரம்பிக்கிற அன்னைக்குத் தான் திரும்ப வருவோம்."

"லீவுல எனக்கு என்னா வாங்கி வருவ?" என்ற ராதாவுக்கு "அஸ்கு புஸ்கு" என்று பழிப்புக் காட்டி விட்டு ஓடி விட்டான் நவீன்.

இது நடந்து சரியாக 20 ஆண்டுகள் ஆகி விட்டன.

(அலை மீளும்)

அலை - 2

"ஏண்டா இந்தக் கணக்கு மட்டும் எனக்கு வரவே மாட்டேங்குது?" என்றாள் ராதா. "உன்னை மாதிரி மண்டுக்கெல்லாம் கணக்கு வராதாம்." சிரித்துக் கொண்டே சொன்ன நவீனைக் குட்ட துரத்தி ஓடினாள் ராதா.

வீட்டில் இருக்கும் போது அம்மா செல்லமாய் இருக்கும் ராதாவுக்கும் சரி, அப்பாவுடன் விளையாடிக் கொண்டே இருக்கும் நவீனுக்கும் சரி, பள்ளி வந்து விட்டால் ஒரே ஆட்டம் தான். இருவரில் ஒருவர் வராவிட்டாலும் அன்று பள்ளியில் சோகமாய் இருப்பவர் இன்னொருவர்! இருவரும் மதிய உணவைச் சேர்ந்தே சாப்பிடுவார்கள்.

அவளுக்கு எது பிடிக்காதோ அதை வேண்டுமென்றே செய்து அவளைக் கோபமூட்டி பின்னர் அவளைத் தாங்குவதே நவீனின் பொழுதுபோக்கு. ராதாவும் லேசுப்பட்டவள் அல்ல. அவனது ஒரு பொருளைக் கூட துவம்சம் செய்யாமல் விட மாட்டாள். படிப்பு என்று வந்து விட்டால் நவீன் தான் முதல் ரேங்க். ராதா கடைசி இல்லையென்றாலும் அவனோடு படிக்க வேண்டும் என்பதாலேயே கடைசி நேரத்தில் படித்து பாஸாகி விடுவாள்.

இவர்கள் இருவரின் நட்பைப் பற்றி இருவரின் பெற்றோரும் சிலாகித்துப் பேசுவார்கள். ராதாவின் அம்மாவுக்கு நவீனை அடிக்கடி எடுத்துக்காட்டி பேசாவிட்டால் தூக்கம் வராது!

இருவருக்கும் பிடித்த விளையாட்டு கேரம்போர்டு. எப்போதும் சிவப்புக் காயினை எடுப்பது ராதாவாகத் தான் இருக்கும்!

ராதாவின் அப்பா முதன் முதலில் வாங்கி அனுப்பிய தொலைக்காட்சியை அதிசயித்துப் பார்த்து அதில் கார்ட்டூன் பார்ப்பதில் இருவருக்கும் கொள்ளை ஆசை. ஞாயிறானால் அவன் அம்மாவை நச்சரிக்க ஆரம்பித்து விடுவான் நவீன். இருவர் வீட்டிற்கும் அரை மணி நேர பிரயாணம். ஏதாவது சமைத்துக் கொண்டு அவனது அம்மாவும் அவனும் ராதாவின் வீட்டிற்கு வந்து ஒரு மணிநேரமாவது அரட்டை அடிப்பது வழக்கமானது. இதனாலேயே நவீன் வீட்டிலும் டிவி வந்தது!

ஆறாம் வகுப்பு படிக்கிறவங்க மாதிரியே தெரியல. ஏதோ காலேஜ் படிக்கிறது மாதிரி தெரியுது பாடமெல்லாம் என்று அடிக்கடி சலித்துக் கொள்வாள் மங்கை!

ராதா வேறு மாணவியோடு நட்பு வைத்தாலும் சரி, நவீன் வேறு மாணவனோடு நட்பு வைத்தாலும் சரி இருவருக்குமே பிடிக்காமல் இருந்தது.

ஆனால் பதினைந்து ஆண்டுகள் கழித்த பிறகு?

(அலை மீளும்)

அலை - 3

இந்தப் பத்தாம் வகுப்பு என்பதை அரசுத் தேர்வு என்று ஏன் வைத்தார்களோ என்று சலித்துக் கொள்ளாதவர்களே கிடையாது. பெற்றோர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள் மூவரும் இணைந்து பாடுபடுகின்றோம் என்ற பெயரில் அடிக்கும் கூத்து இருக்கின்றதே! ஒன்பதாம் வகுப்பு ஆண்டிறுதித் தேர்வு முடிந்ததும் விடுமுறை கிடையாதாம். சிறப்பு வகுப்புகள் ஆரம்பமாம். பத்தாம் வகுப்பு அரையாண்டுத் தேர்வுக்குள் அனைத்துப் பாடங்களும் நடத்தி பல முறை மீண்டும் மீண்டும் படிக்க வைக்கிறார்களாம். சிறப்பு வகுப்புகள், சிறப்புத் தேர்வுகள் என்று பள்ளிக்கு நூறு சதத் தேர்ச்சி வரவேண்டும் என்று அனைத்துப் பள்ளிகளிலும் பிழிந்து எடுக்கின்றார்கள். அந்தப் பிழியலில் ராதாவும், நவீனும் மட்டும் மாட்டாமல் போவார்களா என்ன?

ஏனென்றால் அது தான் மாணவனின் எதிர்காலத்தை முடிவு செய்யும் காலகட்டம். பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுக்காமல் போனால் ஒரு மாணவன் அவனுக்கு எவ்வளவு தான் ஆர்வமிருந்தாலும் அறிவியலை முதன்மையாகத் தேர்ந்தெடுக்க முடியாது. ஆக, ஒருவனின் வாழ்க்கை மூன்று மணி நேரத்தில் நிர்ணயிக்கப் படுகிறது! அந்த மூன்று மணி நேர ஜுரத்தில் இருவரும் மாட்டிக் கொண்டனர்.

படிப்பு, படிப்பு, படிப்பு என்று அதுவே கதியென்று கிடந்தனர். இதுவரை நட்பு, பொழுதுபோக்கு, படிப்பு என்று வரிசை வைத்திருந்தவர்கள், இப்போது படிப்பு, நட்பு, பொழுதுபோக்கு (அப்படி ஒன்று இருக்கின்றதா என்ன?) என்ற வரிசைக்குத் தள்ளப்பட்டனர்.

தேர்வு முடிவுகளும் வெளியாயின. நவீன் தான் ரொம்ப அழுதான். ராதாவுக்கும் வருத்தம் தான். நவீனுக்கு நல்ல மதிப்பெண்கள் வந்திருந்தன. ராதா குறைந்த மதிப்பெண்கள் எடுத்துத் தேறியிருந்தாள். இருவரும் பிரியும் காலம் வந்தது. நவீன் அறிவியலை முதன்மைப் பாடமாக எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். ராதா பொருளாதாரத்தை எடுத்துப் படிக்க ஆரம்பித்திருந்தாள்.

இருவருக்கும் நட்பு வட்டம் விரிய ஆரம்பித்திருந்தது. ராதா பூப்பெய்தியிருந்தாள். என்ன தான் நட்பு வட்டம் பெரிதானாலும், வகுப்பறையில் பிரிந்து சென்றாலும் அவர்களின் நட்புச் சங்கிலி மட்டும் இறுகிக் கொண்டே இருந்தது.

இன்னும் பத்தாண்டுகளில் இதே நிலை நீடிக்குமா?

(அலை மீளும்)

அலை - 4

பள்ளிப்படிப்பு முடிந்த நிலையில், நவீனுக்கு கோயம்புத்தூரில் ஒரு பொறியியல் கல்லூரியில் இடம் கிடைத்தது. அவனது அம்மாவின் அப்பா வீடு அங்கிருந்ததால் அங்கேயே தங்கிப் படிக்கட்டும் என்று அவனது அம்மாவும் அப்பாவும் முடிவு செய்தனர். நவீனுக்கு முதலில் ஒரு மாதிரியாக இருந்தாலும் பின்னர் பழகி விட்டது. கல்லூரி உண்டு வீடு உண்டு என்று இருந்தாலும் வகுப்புத் தோழர்களும், தோழியரும் கொண்ட நண்பர்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருந்தனர். நெருங்கிய நட்பு வட்டத்திற்குள் குறைந்தது பத்து பேராவது இருந்தனர்.

ராதா சென்னையிலேயே ஒரு கலைக்கல்லூரியில் இளங்கலை பொருளாதாரம் படிக்க ஆரம்பித்தாள். அவளுக்கும் நிறைய கல்லூரித் தோழர் தோழியர் புதிதாக நட்பு பாராட்ட ஆரம்பித்திருந்தனர்.

கல்லூரி வாழ்க்கை இருவருக்கும் சந்தோசமாகச் செல்ல ஆரம்பித்திருந்தது.

இந்தக் காலகட்டத்தில் இருவரின் நட்பும் கரைந்து போயிருக்க வேண்டியது தான். ஆனால் அந்த நட்பு புதுப்பிக்கப்பட்டது நவீனின் பிறந்த நாளன்று. அன்று காலை அவன் வீட்டு தொலைபேசி அழைப்பில் அவன் யார் யாரையோ எதிர்பார்க்க, பேசியது ராதா. முதன் முதலில் காலையிலேயே பிறந்த நாள் வாழ்த்தை அவள் கூற, சந்தோசத்தில் அவனுக்குத் தலைகால் புரியவில்லை.

நல்லதொரு நட்பு இட, கால, பொருள் போன்ற எல்லைகளைக் கடந்தது என்பதைப் புரிந்து கொண்டான் நவீன். இந்த நட்பு வெறும் பள்ளிக் கால நட்பு மட்டுமல்ல. இது எப்போதும் தொடரும் என்று நினைத்துக் கொண்டான்.

அவனது தோழர்கள் எத்தனையோ பரிசுகள் கொடுத்தாலும், ராதா காலையில் சொன்ன எந்த எதிர்பார்ப்புமில்லாத அந்த வாழ்த்தே அவனுக்குப் பெரிதாய்த் தெரிந்தது.

சென்னைக்கு அவன் அம்மாவைப் பார்க்க வரும்போதெல்லாம் அவளைச் சந்தித்துப் பேசத் தவறுவதில்லை. அப்போது பழைய கதையைப் பேசியும், சிரித்துக் கொண்டும் இருவர் வீடும் கலகலப்பாகிவிடும். இருவருமே அவரவர் வீட்டிற்கு ஒரே பிள்ளை. ராதா வீட்டிற்கென்று வரும் அவளது நட்பென்றால் அது நவீனாகத் தான் இருப்பான். அதே போல் தான் நவீன் வீட்டிற்கும் ராதா இயல்பாய் வந்து போவாள். நவீன் ஊரில் இல்லையென்றால் இன்னும் கொஞ்சம் அதிக நேரம் ராணியுடன் பொழுதைக் கழிப்பாள் ராதா.

ஆனால் விதி இவர்கள் வாழ்வில் இன்னும் மூன்றாண்டுகளில் படுத்தப் போகும் பாடு?

(அலை மீளும்)

அலை - 5

இருவரின் கல்லூரிப் படிப்பும் முடிவடைவதற்குள் பல விஷயங்கள் நடந்தேறி இருந்தன ராதாவின் வீட்டில். ராதாவின் அன்புக்குரிய தாத்தா காலமாகி இருந்தார். அவளது தந்தை வெளிநாட்டிலிருந்து இந்தியாவிற்கே திரும்பி இருந்தார். வெளிநாட்டில் சம்பாதித்த பணத்தைக் கொண்டு இந்தியாவில் முதலீடு செய்து தனது மீதிக் காலத்தை இந்தியாவில் கழிக்கத் திட்டமிட்டிருந்தார்.

நவீனின் கல்லூரிப் படிப்பும் முடிந்திருந்தது. அவனுக்குச் சென்னையில் ஒரு மென் பொருள் நிறுவனத்தில் நல்ல சம்பளத்துடன் வேலை கிடைத்திருந்தது. அவன் சென்னை வந்ததும், மாலை வேளைகளில் தினமும் ஒரு பத்து நிமிடமாவது ராதாவுடன் பேசாமல் இருந்ததில்லை. அன்று அலுவலகத்தில் நடந்த அத்தனையும் அவளுடன் பகிர்ந்து கொள்வான்.

இந்த வேளையில் தான் ராதாவின் திருமணப் பேச்சு ஆரம்பமானது. நவீன் கூடச் சொன்னான், "இவள யாரு கட்டிக்குவா? பாவம் கட்டிக்கப் போறவன். ஒரு வேலை செய்யத் தெரியுமா? மாமியார் இருக்குற வீடாப் பாருங்க. அப்பத் தான் இவளுக்கு கஷ்டம்னா என்னான்னு தெரியும்" என்று. பதிலுக்கு அவளும், "உன் வேலை என்ன உண்டோ அதப் பாத்துக்கிட்டுப் போவியா?" என்பாள்.

ஒருநாள் மாலை. இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். அப்போது தான் கவனித்தான். ராதாவின் கண்களில் கண்ணீர். "ஏய்! என்னாச்சு?" என்றான் நவீன். "இத்தனை நாள் எங்கப்பா தான் வெளிநாட்டில இருந்தாரு. இப்போ யாரோ அமெரிக்கா மாப்பிள்ளையாம். என்னைப் பொண்ணு பாக்க இன்னைக்கு வர்றாங்களாம். புடிச்சிருந்தா கல்யாணம் பண்ணிக்கிட்டு உடனே அமெரிக்கா பொறப்படணுமாம்" என்றாள். "அட! இதுக்குப் போய் யாராவது அழுவாங்களா? அவனவன் எப்போடா அமெரிக்கா போலாம்னு காத்துக்கிட்டு இருக்கான். நான் கூட என்னவோ ஏதோன்னு நினைச்சிட்டேன். அப்பாடி, இனிமே உன் தொல்லை விட்டது!" என்றான் சிரித்துக் கொண்டே.

"ஒனக்கென்ன ஈசியாச் சொல்லிட்ட. எனக்கு வெளிநாட்டு மாப்பிள்ளையும் வேணாம். ஒரு மண்ணாங்கட்டியும் வேணாம்" என்றாள் ராதா. "அட! மண்ணாங்கட்டியக் கூட கல்யாணம் செஞ்சிக்குவியா?" என்ற நவீனை முறைத்துக் கொண்டே வீட்டிற்குச் சென்றாள் ராதா.

அன்று இரவு வெகுநேரம் நவீனுக்குத் தூக்கம் வரவில்லை.

(அலை மீளும்)

அலை - 6

நவீனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. காலை எழுந்ததும் முதல் வேலையாக ராதாவின் வீட்டுக்குத் தான் போன் செய்தான். அவளது அம்மா தான் எடுத்தார். "எப்போ கல்யாணம்?" என்று தான் கேட்டான் நவீன். அவன் அம்மாவோ அழ ஆரம்பித்து விட்டார்.

"என்ன ஆச்சு? ஏன் அழறீங்க?" என்று கேட்ட நவீனிடம், "நீயே வந்து என்னான்னு கேளு அவகிட்ட" என்ற படி போனை வைத்து விட்டார்.

அன்று அவனுக்கு அலுவலகத்தில் ஒரு முக்கியமான வேலை இருந்ததால் அங்கே சென்று விட்டு மாலை தான் ராதாவின் வீட்டுக்குப் போக நேரம் கிடைத்தது. மங்கை இவனைப் பார்த்ததும், "நீ தான் அவளுக்குச் சொல்லணும்பா. நல்ல இடம். ஒரேயடியா மாட்டேன்னு சாதிக்கிறா" என்றார்.

அவள் அறைக்குள் நுழைந்தான் நவீன். அவளைப் பார்க்கவே கவலையாய் இருந்தது அவனுக்கு. அருகில் சென்றான். "என்ன ஆச்சு? நீ என்ன தான் நினைச்சுக்கிட்டு இருக்க?" என்றான்.

"நாந்தான் நேத்தே சொன்னேன்ல. எனக்கு வெளிநாடு போக இஷ்டம் இல்ல. யாரு இப்போ கல்யாணம் வேணும்னு அழுதா?" என்றாள் ஆங்காரமாக. "நீ விளையாட்டுக்குத் தான் சொல்றேன்னு நினைச்சேன்பா" என்றான். "ஆமா நாம ரெண்டு பேரும் சின்னப் புள்ளங்க பாரு. அதான் உன் கிட்ட நான் விளையாடுறேன்" என்றாள் ராதா.

"சரி. எப்படியும் கல்யாணம் பண்ணத் தானே போற. இப்போ என்ன? உனக்கு வெளிநாடு போகப் புடிக்கலையாக்கும்? வேற மாப்பிள்ள பாக்கச் சொல்லவா?" என்றான் நவீன். "ஏன்? எனக்கு மாப்பிள்ள பாக்குறது தான் உன் வேலையா?" என்றாள் ராதா. "இங்க பாரு. பொண்ணுக்குத் திருமண வயது 21ன்னு போற வாற ஆட்டோல கூட எழுதியிருக்கு. பாத்ததில்லையா? உன் வயசு என்னான்னு தெரியுமா? இப்பவே 23 ஆச்சு. இப்போ கல்யாணப் பேச்சு எடுக்காம பின்ன எப்போ எடுப்பாங்க? உன் அப்பா அம்மா பக்கம் இருந்தும் யோசிச்சுப் பாரு. இப்போ என்ன நடந்துச்சு உனக்கு?" என்றான் கனிவுடன்.

"எனக்குக் கல்யாணமே புடிக்கல."

(அலை மீளும்)

அலை - 7

"ஆமா. இப்போ கல்யாணம் புடிக்கலைன்னு சொல்லுவ, அப்புறம் வாழ்க்கையே புடிக்கலைன்னு சொல்லுவ. நீ சொல்றத எல்லாம் இங்க ஆமா சாமின்னு தலையாட்டிக் கிட்டே கேட்டுக்கிட்டு இருப்பாங்கன்னு நினைக்கிறியா?" என்றான் நவீன். ராதா எதுவும் பேசவில்லை. மௌனமாக இவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். நவீனும் வேறெதுவும் பேசவில்லை.

மெதுவாக அறையை விட்டு வெளியே வந்தான். "என்னப்பா? என்ன சொல்லுறா?" என்று கேட்டார் மங்கை. "வெளிநாட்டுக்குப் போறதுக்கு பயப்பட்றா. நீங்களாவது உள்நாட்டுல பார்த்திருக்கக் கூடாதா? வேற பையனைப் பாருங்க. சமாதானம் செய்வோம்" என்ற நவீன் தன் வீட்டுக்குக் கிளம்பினான். அடுத்த நாள் வேலை முடிந்து வழக்கமாக ராதா வீட்டுக்குப் போனான். அங்கே அவள் இல்லை. "வந்தா நான் வந்தேன்னு சொல்லுங்க" என்று மங்கையிடம் சொல்லிவிட்டு வீட்டுக்குத் திரும்பினான் நவீன்.

அவன் வீட்டு வாசலில் ராதாவின் செருப்பு கிடந்தது. கதவு பூட்டாமல் சாத்தி மட்டும் இருந்தது. மெதுவாக உள்ளே நுழைந்தான் நவீன். உள்ளே ராணியும் ராதாவும் பேசிக் கொண்டிருந்தார்கள். "நவீனுக்குத் தான் படிப்பு முடிந்து வேலை கிடைத்து விட்டதே, கல்யாணம் செய்து வைக்க வேண்டியது தானே?" என்று ராதா கேட்க, "ஆமா நாங்களா வேண்டாம்னு சொல்றோம். அவன் தான் இன்னும் இரண்டு வருசம் போகட்டும்னு சொல்லிக்கிட்டு இருக்கான்" என்றார் ராணி.

"இந்த லட்சணத்துல அவன் எனக்கு புத்தி சொல்ல வந்துட்டான் நேத்து" என்று சொல்லும் போது சரியாக நவீன் இருவரும் சிரித்த வண்ணம் பேசிக் கொண்டிருந்த சமையலறைக்குள் நுழைந்தான்.

"உன்னைத் தேடி அங்கே போனா, இங்கே என்ன வத்தி வச்சிக்கிட்டுருக்க நீ?" என்றான் நவீன். "அவ சொல்றதுல என்ன தப்பு இருக்கு?" என்ற அம்மாவைப் பார்த்து, "அம்மா, ஆண்களுக்குத் திருமண வயதுன்னு யாராவது விளம்பரம் செய்றாங்களா? இங்கே சில பெண்களே கல்யாணம் வேண்டாம்னு படம் காண்பிக்கிறாங்க. நாங்க பொறுப்புணர்ந்து சொன்னா உங்களுக்கெல்லாம் புரிய மாட்டேங்குது" என்றான் நவீன்.

"அப்போ எப்பத் தான் உன் கல்யாணம்?" என்றாள் ராதா அவன் கண்களை நேருக்கு நேராய்ப் பார்த்து.

"உன் கல்யாணம் முடிந்த பிறகு தான்" என்றான் நவீனும் அவள் கண்களைப் பார்த்த வண்ணம்.

(அலை மீளும்)

அலை - 8

ராதா விடாப்பிடியாக மறுத்ததால் அந்த வெளிநாட்டு மாப்பிள்ளையை நிராகரித்தனர் அவளது பெற்றோர்கள். என்னதான் தம்பியோ தங்கையோ அடுத்து கலியாணத்திற்காக நிற்காவிட்டாலும், என்ன தான் செல்லமாக வளர்த்திருந்தாலும், என்றைக்காவது ஒரு நாள் வேற வீட்டுக்குப் போறவ தானே? வயசு வேற ஏறிக்கொண்டே போகின்றது என்று மங்கைக்குக் கவலை. இரண்டு மாதங்கள் இப்படியே போனது.

அடுத்து ஒரு நல்ல வரன் உள்ளூரிலேயே அமைந்தது. இந்த முறை அவளுக்கே தெரியாமல் நவீன் மூலம் தூது விட்டார்கள். அன்று மாலை வழக்கம் போல் கேலியும் கிண்டலுமாய் தான் ஆரம்பித்தது அவர்கள் பேச்சு.

அவளது வீட்டு மாடி. அந்தி சாயும் நேரம். பறவைகள் அவைகளின் இல்லங்களுக்குத் திரும்பிக் கொண்டிருந்தன. மரங்கள் நிறைந்த அந்தத் தெரு பல பறவைகளுக்கு புகலிடமாய் இருந்தது. அவைகளின் சத்தம் அவர்களின் பேச்சுக்கு எவ்வித இடையூறாகவும் இல்லை!

"ஆமா, இப்படியே எவ்வளவு நாள் தான் காலம் தள்ளப் போற?" என்று ஆரம்பித்தான் நவீன். "எதப் பத்திக் கேக்குற?" என்றாள் ராதா புரியாத மாதிரி.

"வீட்டிலேயே இருக்க போரடிக்கலியா?" என்றான். "வேலைக்கு ட்ரை பண்ணிட்டு இருக்கேன். நீ தான ரெசியூமெல்லாம் தயார் பண்ண?" என்றாள். "நான் அதக் கேக்கல. நீ வேலைக்குப் போய் என்ன செய்யப் போற? உங்கப்பாவும் அம்மாவும் ரொம்ப வருத்தப்பட்றாங்க" என்றான். "இப்ப ஏன் உன் கல்யாணத்துக்கு அவசரப்பட்ற?" என்றாள். "என் கல்யாணமா? நான் உன் கல்யாணம் பத்திப் பேசுறேன்". "நானும் அதத் தான் சொல்றேன். என் கல்யாணத்துக்கப்புறம் தான் உன் கல்யாணம்னு சொன்ன. இப்போ என்னைச் சீக்கிரம் கல்யாணம் பண்ணுன்னா என்ன அர்த்தம்? உனக்குக் கல்யாணத்துக்கு அவசரம்னு தானே?" என்றாள் சற்றுக் கோபத்துடன்.

நவீன் சிறிது நேரம் ஒன்றும் பேசவில்லை. "சரி விளையாட்டு போதும். உனக்கு எப்போ பொறுப்பு வரும்? வாழ்க்கையில் துணை இல்லாமலேயே வாழ்ந்துட முடியுமா? சமுதாயத்துல எல்லாருக்கும் கடமை இருக்கு. நீ ஏன் அதை ஏத்துக்கிட மாட்டேன்னு அடம் புடிக்கிற? என் கிட்ட சொல்லக் கூடாதா?" என்றான்.

வெகுநேரம் பறவைக் கூட்டத்தைப் பார்த்தபடி இருந்தாள் ராதா. நன்றாக இருண்டிருந்தது. தூரத்தில் வெளிச்சப்புள்ளிகளாய் விண்மீன்கள் வரத்துவங்கியிருந்தது. ராதா மெல்ல ஆரம்பித்தாள். "இல்ல நவீன். எனக்கு இதெல்லாம் தெரியாம இல்ல. ஆனா, எல்லாரும் என்னை விட்டு பிரிஞ்சிருவீங்களோன்னு தான் எனக்கு பயம்மா இருக்கு" என்றாள். "அதுக்காக என்ன செய்றது ராதா? வரும் போது ஒன்னாவா வந்தோம். போகும் போது ஒன்னாவா போகப் போறோம்? இதுக்கெல்லாம் கவலைப் பட்டா நடக்குமா?" என்றான் நவீன்.

"அதே தான் நானும் கேக்குறேன். வரும் போது ஒன்னா வரல. போகும் போது ஒன்னா போகப் போறதில்ல. ஆனா வாழ்ற வரைக்கும் ஒன்னா வாழலாமே."

"இப்போ ஒன்னும் குறைஞ்சு போகல. உள்ளூருலேயே ஒரு மாப்பிள்ள பார்க்கலாம். நீ எப்போ வேணும்னாலும் உங்கம்மா அப்பாவை வந்து பார்த்துக்கலாம். சரியா?" என்றான்.

விரக்தியாய் சிரித்த ராதா, "ஹும். அதெல்லாம் சரி தான். இந்தப் புது உறவு வர்றதால பழைய

உறவு ஒன்றும் கெட்டுப் போவப் போறதில்ல. ஆனா நீ? உன் நட்பு? அது நீடிக்க முடியுமான்னு யோசிச்சியா?"

(அலை மீளும்)

அலை - 9

நவீன், "அட! இதுக்காக யாராவது கல்யாணம் வேண்டாம்னு சொல்வாங்களா?" என்றான். "நட்பு யாரோட வாழ்க்கையையும் பாதிக்காது ராதா. நீயே சொல்லு? நம்ம பிரண்ட் கஷ்டப்படணும்னு யாராவது நினைப்பாங்களா?"

"கல்யாணங்கிறது ஆயிரங்காலத்துப் பயிர்னு சொல்லுவாங்க. நெல் நாத்தையெல்லாம் ஒன்னா வளர்ப்பாங்க. அப்புறம் அதை அப்படியே மண்ணோட சேர்த்தெடுத்து வயலில் இடைவெளி விட்டு நடுவாங்க. போதிய இடைவெளி இல்லைன்னா பயிர்களுக்குத் தான் பாதிப்பு. அதனால வளர முடியாது."

அது மாதிரி நாமளும் ஒன்னாவே வளர்ந்தோம். இப்போ நாற்றை எடுத்து பயிரா நடுறதுக்குக் காலம் வந்தாச்சு. ஆனா, இதனால நம்ம நட்பு அழிந்து போகும்னு நான் நினைக்கல ராதா. நீ எங்க போனாலும் அது மாறாது. ஒருவேளை தூரம் அதிகமானா நம்ம நட்பு இன்னும் இறுகுமோ என்னவோ?" என்றான்.

"வெறும் பிறந்த நாளைக்கு விஷ் பண்றதும், இல்ல சிரிச்சு சிரிச்சு பேசிக்கிறதும் தான் நட்புன்னு நினைச்சியா? உனக்காக நான் அழுதா அது நட்பு! இப்போ எனக்காக நீ பேசிக்கிட்டு இருக்க பாத்தியா அது நட்பு. இந்த மாதிரி ஒரு நட்பு எனக்கு ஒரு தோழிகிட்ட கிடைச்சிருந்தா அதுக்காக நான் கவலைப்பட்டிருக்கவே மாட்டேன். எத்தனை தடவை நினைச்சிருக்கேன் தெரியுமா? நான் ஆம்பிளையாப் பொறக்கலயே அல்லது நீ பொம்பளயாப் பொறக்கலயேன்னு? இந்த உலகம் ஒரு ஆணுக்கும் பொண்ணுக்கும் நட்பு இருக்கும்னு கூட ஏத்துக்க மாட்டேங்குது. இப்படி இருக்கும் போது நம்ம நட்ப விட்டுக் குடுக்க என்னால முடியல. அதனால தான் நம்ம நட்பைப் பிரிக்கிற மாதிரி வர்ற அந்தக் கலியாணத்தை என்னால பண்ண முடியாதுன்னு சொல்றேன்." என்றாள்.

"நீ ஏன் இவ்வளவு பொசசிவ்வா இருக்கேன்னு தான் எனக்குப் புரியல ராதா. சரி உனக்குப் புருசனா வரப்போறவர் நம்ம நட்பை ஏத்துக்கிட்டா அப்போ உனக்குச் சந்தோசமா? கொஞ்சம் நினைச்சுப் பாரு. சந்தோசங்கிறது எங்கேயோ வெளிய இருந்து நமக்குக் கிடைக்கிறதில்ல. மனசுக்குள்ள இருக்கு. தோண்டினா கிடைக்கும். நல்லா யோசிச்சுப் பாரு. இதனால எத்தனை பேரு மனசை வருத்தப்பட வைக்கிற நீ?" என்றான்.

"சரி. திரும்பவும் கேட்குறேன். நீ ஏன் கல்யாணம் பண்ண மாட்டேங்குற? அதுவும் கேட்டா என் கல்யாணம் முடியட்டும்னு சொல்ற"

"ஏன்? என் பிரண்டு மணமாலையும் கழுத்துமா நிக்குறதப் பார்த்துட்டு நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்னு சொன்னா அது தப்பா? வேணும்னா நீயே பொண்ணைப் பாரு. அவளை நான் கல்யாணம் பண்ணிக்கிறேன்"

(அலை மீளும்)

அலை - 10

"ரொம்ப நல்லது. முத வேலையா அதச் செய்யுறேன். ஆனா, கல்யாணம் பண்ணினப் பிறகு, உன் வொய்ப் என்னைப் பார்க்கக் கூடாது பேசக்கூடாதுன்னு சொன்னா நீ என்ன செய்வ?"

"அவ ஏன் அப்படிச் சொல்றா? அதப் பத்தி நீ ஏன் கவலைப்பட்ற. எது எப்படியானாலும் நம்ம நட்பு தொடரும். இலக்கியத்துல படிச்சதில்லையா? ஒருத்தரையொருத்தர் பாக்காமலே நட்பை வளர்த்திருக்காங்க."

"நான் கேட்டது அந்த அர்த்தத்துல இல்ல. உன் மனைவி என் நட்பு வேண்டாம்னு சொன்னா விட்ருவியான்னு தான் கேட்டேன்."

கொஞ்ச நேரம் மௌனமாக இருந்த நவீன், "எதிர்காலத்துல இப்படி இருக்குமோ அப்படி இருக்குமோன்னு நினைச்சிக்கிட்டே இருந்தா எப்படி? எல்லாம் நல்லதாவே நினைப்போம். ஏன்? நம்மைப் புரிஞ்சவங்களா என் மனைவியும் உன் கணவனும் இருக்கக் கூடாதா?" என்றான்.

"இந்த உலகத்துல அப்படி எத்தனை கணவன் மனைவியை நீ பார்த்திருக்கன்னு சொல்லு? அவங்களுக்குள்ளவே முதல்ல அடிச்சிக்கிறாங்க. இதுல அடுத்தவங்களோட நட்புன்னா இன்னும் தான் சண்டை கூடும்."

"சரி. அப்போ என்ன தான் இதுக்குத் தீர்வுன்னு சொல்லு."

"அதான், எனக்குக் கல்யாணமே வேண்டாம்னு சொல்றேனே. இல்லாட்டி..."

"இல்லாட்டி, நாமளே கல்யாணம் பண்ணிக்க வேண்டியது தான்னு சொல்றியா?" என்றான் நவீன்.

குழப்பமான முகத்துடன் ராதா நவீனைப் பார்த்தாள்.

(அலை மீளும்)

அலை - 11

ஐந்து நிமிடங்களுக்குச் சற்று முன் தான் இருவரும் மேலே போய் ரொம்ப நேரம் ஆச்சுதே இருவருக்கும் கொறிக்க ஏதாவது கொடுப்போம் என்ற நினைப்பில் மங்கை மேலே வந்தார். அவர்கள் பேசுவதை ஒட்டுக் கேட்கும் எண்ணமெல்லாம் அவருக்கு இல்லை. ஆனால் இருவரும் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும் போது எப்படி குறுக்கிடுவது என்று ஒன்றும் பேசவில்லை. ஆனால் அதே சமயம் அவருக்குக் கீழே இறங்கிச் செல்லவும் மனதில்லை. ராதா என்ன தான் சொல்கின்றாள் என்று பார்ப்போம் என்று காத்துக் கொண்டிருந்தார்.

இதுவரை முகம் பார்த்துப் பேசிக் கொண்டிருந்த இருவரும் மரம் பார்க்க ஆரம்பித்தனர். எதுவும் பேசிக் கொள்ள வில்லை. சரி இது தான் சமயமென்று மொட்டை மாடிக்கு வந்தார் மங்கை. இந்தாங்க இதச் சாப்பிடுங்க என்றார்.

"இல்ல. இருக்கட்டும். நான் கிளம்புறேன். லேட்டாயிருச்சு. வீட்டுக்குப் போகணும்" என்று நவீன் தப்பிக்கும் முயற்சியில் இருந்தான். மங்கையும் ஒன்றும் சொல்லவில்லை. ராதாவும் ஒன்றும் சொல்லவில்லை. "சரி. வர்றேன்" என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லி விட்டு கிளம்பிவிட்டான்.

இப்போது ராதாவும் மங்கையும் மட்டும் மொட்டை மாடியில். நவீன் பேசியதைக் கேட்டிருப்பாரோ என்று ராதாவும் சந்தேகப்பட்டாள். மங்கை மெல்ல பேச ஆரம்பித்தார். "நவீன் கடைசியாச் சொன்னத நானும் கேட்டேன். எனக்கு ரொம்ப சந்தோசமா இருக்கு ராதா. கையில வெண்ணெய வச்சிக்கிட்டு நெய்க்கு அலைஞ்சோமேன்னு நினைக்கிறேன். நீ மட்டும் உம்னு சொல்லு எல்லாம் நல்லபடியா நடக்கும். இப்போ தாண்டி என் மனசு நெறஞ்சு இருக்கு."

"ஐயோ அம்மா! நீங்க கொஞ்ச நேரம் பேசாம இருக்கீங்களா? யாருகிட்டயும் சொல்லிடாதீங்க. கொஞ்சம் பொறுங்க. நான் நிறைய யோசிக்கணும்" என்றாள்.

"ஆமா. என்னத்த யோசிக்கப் போற? நவீன் மாதிரி ஒரு பையன் கிடைக்கிறதுக்கு குடுத்து வைக்கணும்."

அங்கே நவீன் எப்படி இந்தக் கேள்வி தன் வாயிலிருந்து வந்தது என்று நினைத்துக் கொண்டான். வீட்டிலும் யாருடனும் முகம் கொடுத்துப் பேசவில்லை.

மறுநாள் மாலை அவன் வழக்கம் போல் வருவான் என்று எதிர்பார்த்தாள் ராதா. ஆனால் அன்று மட்டுமல்ல மூன்று நாட்களாக அவன் வரவில்லை. செல்போனில் கூப்பிடு என்ற மங்கைக்குக் கூட அவனாக வரட்டும் என்று பதில் சொன்னாள் ராதா.

நான்காம் நாள், அவளுக்கே பொறுக்காமல் காலை நவீனின் வீட்டுக்குப் புறப்பட்டுச் சென்றாள் ராதா.

அங்கே,

(அலை மீளும்)

அலை - 12

அங்கே வீடே அமைதியாக இருந்தது. உள்ளே சென்று ராணியைப் பார்த்ததும், "நவீன் எங்கே?" என்று தான் ஆரம்பித்தாள் ராதா. "அட! உங்கிட்ட நிசமாவே சொல்லலியா அவன்? என்கிட்ட சும்மா தான் சொல்லிட்டுப் போறான்னு நினைச்சேன். உண்மையாவே அவன் எங்கேன்னு உனக்குத் தெரியாதா?" என்று புதிர் போட்டார் ராணி.

"இல்லியே எங்கிட்ட ஒன்னுமே சொல்லலியே. என்னைப் பாத்தே நாலு நாளாச்சி. அதான் சரி, என்னன்னு பாத்துட்டு போலாம்னு வந்தேன்" என்றாள் ராதா.

"அவனுக்குத் திடீர்னு ஒரு பிராஜக்டை முடிக்கணும்னு அமெரிக்காவுக்கு பேக்கப் பண்ணி அனுப்பிட்டாங்க கம்பெனியில இருந்து. ஐயா இப்போ அமெரிக்காவுல. ராதாகிட்ட சொல்லலன்னு சொன்னான். நான் கூட நம்பல. இப்பத் தான் நிசமாவே சொல்லாம போயிருக்கான்னு தெரியுது."

"திரும்ப எப்போ வருவான்?" ராதாவின் வார்த்தைகளில் வருத்தம் மித மிஞ்சி இருந்தது. அதைக் கவனித்த ராணி, "மேக்சிமம் பதினஞ்சே நாள்ல வந்திருவேன்னு சொன்னான்."

சிறிது நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு வீட்டிற்குக் கிளம்பிச் சென்றாள் ராதா. அவளால் அவன் சொல்லாமல் கொள்ளாமல் போனதை ஒப்புக் கொள்ளவே முடியவில்லை. வீட்டுக்குள் நுழைந்தது தான் தாமதம், "நீ அங்கே போயிருக்க, நவீன் இங்கே போன் பண்ணினான். அமெரிக்கா போயிருக்கானாமே? உன் கூட பேசணும்னு சொன்னான். நீ அவன் வீட்டுக்குப் போயிருக்கேன்னு சொன்னேன். நைட்டு பேசுறேன்னு சொன்னான்" என்றார் மங்கை.

"யாரு அவனைப் பேசச் சொன்னாங்க? நான் ஒன்னும் அவன் கூடப் பேசல. பெரிய ஆளாயிட்டான்ல. அதான். அவன் பேசினான்னா நான் பேசமாட்டேன்னு சொல்லுங்க" என்றாள்.

சிரித்துக் கொண்டே தலையிலடித்துக் கொண்ட மங்கை, "வேணும்னாலும் பாரு, போன் வந்ததும் நீ தான் எங்கிட்ட இருந்து புடுங்கிப் பேசப் போற" என்றார்.

அதற்குள் ராதா தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்தி விட்டிருந்தாள்.

(அலை மீளும்)

அலை - 13

அந்த வீட்டுக்கு வரும் ஒவ்வொரு தொலைபேசி அழைப்பும் ராதாவால் கண்காணிக்கப்பட்டது. அவள் எடுத்துப் பேசவில்லையே தவிர அவளது காது உடனே கூர்மையுடன் கவனித்துப் பார்க்க ஆரம்பித்து விடும்.

இறுதியாய் நவீனின் அழைப்பும் வந்தே விட்டது! மங்கை தான் முதல்ல் எடுத்தார் தொலைபேசியை. "சொல்லு நவீன். ராதா தான இதோ கூப்பிட்றேன்" என்று கேட்டவுடன், குப்புறப் படுத்துக் கொண்டாள் ராதா தன் அறையில்! அம்மா வந்து அழைத்ததும் "ஆமா வேற வேலை இல்ல! எனக்குத் தூக்கம் வருது" என்று பிகு பண்ணிக் கொண்டே வந்து ரிசீவரைக் கையில் எடுத்தாள்.

"என் மேல கோவமா?" என்றான் நவீன். வெகு நேரம் ஏதும் பேசாத ராதா "ம்" என்று மட்டும் சொன்னாள். "நான் அன்னைக்கு அப்படி கேட்டிருக்கக் கூடாது தான்" என்றான். அட! ஏன் சொல்லாமப் போனேன்னு கோபப்பட்றியான்னு கேட்பான்னு பார்த்தா அன்னைக்கு கேள்வி கேட்டதுக்காக கோபமான்னு கேட்கிறானே! என்று நினைத்த ராதா "எங்கிட்டக் கூட சொல்லாம அமெரிக்கா போற அளவுக்கு நீ பெரிய மனுசன் ஆயிட்ட. அப்டித் தானே?" என்றாள் குரலில் சிறிது (பொய்க்) கோபத்துடன். "சொல்லிட்டுப் போகக் கூடாதுன்னு தான் சொல்லல ராதா." இப்போது தான் அவன் மேல் கோபம் வந்தது அவளுக்கு.

"ஏன்?" என்று கேட்டாள். "இன்னும் பத்து நாள்ல அங்கே வந்திருவேன். அப்போ நேர்ல சொல்றேன்" என்றான் நவீன். அவளுக்கு அதிகம் பேச வேண்டும் என்று ஆசை தான். ஆனால் வெளிநாட்டு அழைப்பு என்பதால் அதிகம் பேசிக் கொள்ளவில்லை. "சரி. நேர்ல வா. பேசிக்கலாம்" என்று வைத்து விட்டாள்.

பத்து நாட்கள் வேலை என்றது பதினைந்து நாட்களாகி விட்டது. அதற்குள் மங்கை ராணியிடம் இது பற்றிச் சொல்லி விட்டார் ராதாவுக்குத் தெரியாமலே! "நாளைக் காலையில வர்றானாம் நவீன்" என்றார் மங்கை செய்தி போல். "நீயும் ஏர்போர்ட் போறியா அவன் அம்மா கூட?" என்று கேட்டதற்கு "ஒன்றும் வேண்டாம்" என்று மறுத்து விட்டாள் ராதா.

மங்கை "நவீன் வந்துட்டானாம்" என்று ரன்னிங் கமெண்ட்ரி கொடுத்துக் கொண்டிருந்தார்.

அன்று மாலை வழக்கம் போல் நவீன் ராதாவைப் பார்க்க வந்திருந்தான்.

(அலை மீளும்)

அலை - 14

நவீன் வந்ததும் வராததுமாய் "எங்கிட்ட ஏன் சொல்லாம போன?" என்றாள் ராதா. அவளையே புன்சிரிப்புடன் பார்த்துக் கொண்டிருந்த நவீன், "நான் இல்லாம நம்ம நட்பு இல்லாம உன்னால இருக்க முடியுதான்னு டெஸ்ட் பண்ணிப் பார்த்தேன்! அதுல நீ தேறிட்ட" என்றான்.

பெண்களுக்கு எங்கிருந்து தான் கண்ணீர் வருமோ தெரியவில்லை. ராதாவால் அவன் கேட்டதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

சிறிது நேரம் எதுவும் பேசாமல் இருந்த நவீன், "நான் தோற்று விட்டேன் ராதா. என்னால் இருக்க முடியும்னு தோணல. நான் சும்மா பொய் சொன்னேன். நீ தான் முதல்ல தோத்துப் போன. மூனே நாள்ல எங்க வீட்டுக்கே போய்ட்ட! உனக்கு சம்மதம்னா சொல்லு நாம கல்யாணம் பண்ணிக்கலாம்" என்றான்.

"டெஸ்ட் பண்ணிப் பார்க்குறதுக்கு நம்ம நட்பு தானா கிடைச்சது உனக்கு? என் வாழ்நாள் முழுதும் நம்ம நட்பை எப்படி விட முடியும்? கல்யாணம் தான் அதுக்கு ஒரு தீர்வுன்னா அதுக்கு நான் ரெடி" என்றாள்.

அதற்குப் பின் நடந்த நிகழ்ச்சிகள் ஜெட் வேகத்தில் நடைபெற்றது இருவர் வீட்டிலும். எல்லோருக்கும் மகிழ்ச்சியான திருமணமாக நவீன், ராதா இருவருக்கும் திருமணம் நடந்தேறியது.

திருமணத்திற்கு மறுநாள் இருவரும் பல மடங்கு சந்தோசத்துடன் அனைவருடனும் கேலி செய்து கொண்டு பேசிக் கொண்டிருக்கும் போது தான் அந்த செய்தி வந்து சேர்ந்தது.

(அலை மீளும்)

அலை - 15

வந்த செய்தியும் சந்தோசமான ஒரு செய்தி தான். நவீனின் மேலதிகாரியிடம் இருந்து தொலைபேசி அழைப்பாய் வந்தது. அவனைக் குறைந்தது மூன்றாண்டுகள் அமெரிக்காவிற்கே அனுப்பும் திட்டம் தான் அது. கூட புது மனைவியையும் அழைத்துச் செல்லலாம் என்றதும் தான் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர் அனைவரும். இல்லாவிட்டால் வேலையை விட்டிருப்பான் நவீன்!

திருமணம் முடிந்து முழுதாய் நாற்பது நாட்கள் கூட ஆகவில்லை. நவீன், ராதா இருவரும் அமெரிக்கா புறப்பட்டுச் சென்றனர். பெற்றோர் நால்வருக்குமே வருத்தம் தான். நால்வரும் அங்கே வந்திருங்க என்று நவீனும் ராதாவும் அழைக்கத் தான் செய்தார்கள். இவர்களுக்கு இந்தியாவை விட்டு வர மனதில்லை. அடிக்கடி பேசிக் கொள்வதோடு சரி.

கல்யாணம் ஆகி இரண்டு ஆண்டுகள் ஆகியிருந்தது. இதோ நவீனும் ராதாவும் இந்தியாவுக்குத் திரும்புகின்றார்கள். மங்கை, ராணி இருவருக்கும் மனம் கொள்ளாத மகிழ்ச்சி. இது வரை புகைப்படத்திலேயே பார்த்த மதிக்குட்டியை நேரில் பார்க்கலாமே. ஆம். நிறைமதி. பேத்தியல்லவா!

விமான நிலையத்திலேயே ஆனந்தக் கண்ணீர் அனைவர் கண்களிலும். நிறைமதி பெயருக்கேற்றவாறு அழகாய் இருந்தாள். அறிவுடனும். பாட்டிகளைப் பார்த்ததும் அழாமல் சமத்தாய் ஒட்டிக் கொண்டாள். அவர்கள் இந்தியாவில் இருந்த ஒரு மாதமும் எப்படி ஓடியது என்றே தெரியவில்லை. "வேலையும் வேண்டாம். ஒன்னும் வேண்டாம். நீங்க எங்கேயும் போக வேண்டாம். இந்தியாவிலேயே இருக்கலாம்" என்று வழக்கம் போல் ஆரம்பித்தார் மங்கை. நவீன் "இன்னும் மிஞ்சிப் போனா மூன்றே வருசம் தான். அப்புறம் இங்கே செட்டில் ஆக வேண்டியது தான்" என்றான்.

அடுத்த மூன்று வருடமும் இவர்களை எதிர்பார்த்தே ஓடியது மங்கைக்கும் ராணிக்கும், தந்தையர்க்கும். அதற்குள் இன்னொரு உறவும் வந்திருந்தது ஆஸ்திக்கும் ஒன்றாய். ஆம். பேரனும் பிறந்திருந்தான். பெயர் ஆதவன்.

சொன்ன மாதிரியே நவீன் தன் விலை மதிப்பற்ற வேலையை உதறி விட்டு எல்லாவற்றையும் மூட்டை கட்டி, இரு குழந்தைகளுடன் இந்தியா வந்து சேர்ந்தான்.

(அலை மீளும்)

அலை - 16

அங்கே அவ்வளவு சம்பளம் வாங்கி வேலை பார்த்தவன், இந்தியாவில் அதில் பத்தில் ஒரு பங்கு கூட இல்லாத ஒரு வேலை தான் பார்க்க ஆரம்பித்தான். ஆனால் பெற்றோருடன் வாழ்வதில் கிடைக்கும் நிம்மதியை அனுபவித்தான்.

ராதா - நவீன் இருவரையும் யார் பார்த்தாலும் மூக்கின் மேல் விரல் வைத்து விடுவார்கள். இருவரும் அப்படி ஒரு வாழ்வு வாழ்ந்தனர். சந்தோசம், துக்கம் இரண்டையும் ஒரே பார்வையில் பார்த்தனர் இருவரும். ஆண்டுகள் ஓடின. நிறைமதியும் ஆதவனும் பெரியவர்களாக வளர ஆரம்பித்தனர். பெற்றோர் ஒவ்வொருவராக சென்று சேரும் காலமும் வந்தது. மங்கை தான் 80 வயது வரை தாக்குப் பிடித்துக் கொண்டு இருக்கின்றார்.

நவீன், ராதா இருவரும் ஐம்பதைக் கடந்திருந்தனர். இதோ இப்போது தான் துவங்கியது போல் இருக்கின்றது. மதி, ஆதவன் இருவரும் கல்லூரிப் படிப்பு ஆரம்பித்து இதோ அவர்களும் சொந்த வாழ்க்கை என்னும் சோலையில் நுழையப் போகின்றார்கள்.

தகுந்த காலத்தில் இருவருக்கும் திருமணமும் செய்து வைத்தார் நவீன். நிறைமதி சென்னையிலேயே ஒரு பெரிய ஜவுளிக்கடை மகனுக்குக் கட்டிக் கொடுத்தார். ஆதவனுக்கு ஒரு மில் அதிபரின் மகளைக் கட்டிக் கொடுத்தார்.

அங்கே தான் சிக்கலே ஆரம்பித்தது.

(அலை மீளும்)

அலை - 17

ஆதவனின் மனைவி சுபாஷினிக்கு ராதாவும் நவீனும் இப்படி வாழ்வது பிடிக்கவில்லை. "வயசு ஐம்பதாச்சு. இன்னும் இப்படி இருந்தா எப்படி? அவங்க இருந்தாத் தான் இவங்க சாப்பிடுவேன்னு? ஊருல உலகத்துல இல்லாத புருசன் பொண்டாட்டியா இருக்காங்க" என்று கருவ ஆரம்பித்தாள்.

முதலில் ஜாடையாய் சொல்லிப் பார்த்தாள். கொஞ்சம் கொஞ்சமாய் நேரடியாய் சொல்ல ஆரம்பித்து, ஒரு நாள் பெரிய பிரச்னையாகி விட்டது.

ஒரு நாள் நவீன் வெளியே போயிருந்த சமயம் ராதாவுக்கு ரத்த அழுத்தம் குறைந்து கீழே விழுந்து விட்டார். "வாங்க ஆஸ்பத்திருக்குப் போவோம்" என்ற மருமகளிடம் "நவீன் இப்ப வந்துரட்டும். போகலாம்" என்று சொன்னது தான் அன்று பெரிய பிரச்னையாகி விட்டது. "நான் என்ன கூட்டிப் போய் கொல்றேன்னா சொன்னேன். ஹாஸ்பிடலுக்குக் கூட என் கூட வரக்கூடாதா? ரெண்டு பேரும் சேர்ந்து சாகப் போறாங்களா என்ன?" என்று அவள் ஆதவனிடம் ஹாலில் பேசிக் கொண்டிருந்ததும் அவன் அவளை அறையும் சத்தமும் கேட்டது. விறுவிறுவென்று வெளியே வந்த நவீன், "பொண்டாட்டிய அடிக்கிறவன் என்னடா புருசன்? இப்படியா உன்ன வளர்த்தோம். என் கண்ணு முன்னாடி இப்படி எல்லாம் நடக்க வேணாம். பேசாம நம்ம அடையார் வீட்டுக்கு தனிக் குடித்தனம் போயிரு" என்றார். அவர்கள் இப்போது இருந்த வீட்டுக்கும் அடையார் வீட்டுக்கும் 10 கி.மீ. இருக்கும். அரை மணி நேரப் பிரயாணம். ஆதவனுக்கும் அதுவே சரியென்று பட்டதால் தனிக்குடித்தனம் ஆரம்பித்தது.

ஆனால், இருவரும் வெளியேறியதால் நவீனோ, ராதாவோ அப்படியொன்றும் கஷ்டப்படவில்லை. ராதாவின் உடல்நிலை தான் கொஞ்சம் கொஞ்சமாக மோசமாகிக் கொண்டே இருந்தது. நிறைமதியும், ஆதவனும் அவ்வப்போது வந்து பார்த்துக் கொண்டனர். இப்படியே ஓராண்டு சென்றது. ஆதவனுக்கு ஒரு மகள் பிறந்தாள். லக்ஷணாவைப் பார்த்து நவீனும் ராதாவும் பூரித்துப் போயினர். பேரக் குழந்தையைப் பார்த்ததிலிருந்து இருவருக்கும் வயதில் பத்தாண்டுகள் குறைந்ததைப் போல் இருந்தது.

அடிக்கடி பேத்தியைப் பார்க்க முடியாவிட்டாலும் போனில் பேசிக் கொள்வார்கள் தாத்தாவும் பாட்டியும். இப்படி எந்தத் தடங்கலும் இல்லாமல் தெளிவான நதியாகச் சென்று கொண்டிருந்த அவர்களின் வாழ்க்கையில் சோகம் தாக்கியது ராதாவின் நோய் வடிவில்.

(அலை மீளும்)

அலை - 18

ராதாவுக்கு ஹார்ட் அட்டாக் ரூபத்தில் வந்தது. மருத்துவமனையிலேயே இருக்க வேண்டியதாயிற்று. மூன்று நாட்களாக ஐ.சி.யூ.வில் இருந்த ராதாவை இன்று தான் மருத்துவ மனையில் இருந்த அறை ஒன்றுக்கு அனுமதித்திருந்தார் மருத்துவர். பேத்தியைப் பார்த்தால் சிறிது தெளியலாம் என்றதால் அப்போது தான் பள்ளியில் சேர்ந்திருந்த அவளை அழைத்து வருவதாக ஆதவன் சொல்லிவிட்டுச் சென்றிருந்தான். திடீரென அவனுக்கு ஒரு வேலை வந்து சேர, சுபாஷினி லக்ஷணாவை அழைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வந்தாள். உள்ளே இருவரும் பேசிக் கொண்டிருக்கும் சத்தம் கேட்டதால் அறைக்கு வெளியிலேயே நின்றாள்.

இத்தனை ஆண்டுகள் ஆன பின்னரும் ராதா நவீனை பெயரைச் சொல்லியே அழைப்பார். வாங்கள் போங்கள் என்று கூடச் சொல்வதில்லை. "இன்னும் ரொம்ப நாளைக்கு இருக்க மாட்டேன்னு நினைக்கிறேன் நவீன்" என்ற ராதாவைப் பார்த்து, "அதெல்லாம் ஒன்னும் ஆகாது." என்று ஆறுதல் சொன்னார் நவீன். ஆனால் அவருக்கும் தெரிந்திருந்தது எப்போதும் எதுவும் நடக்கலாம் என்று.

கிட்டத்தட்ட அவர்களின் வாழ்க்கையை இருவரும் அன்று மீண்டும் ஒருமுறை வாழ்ந்து பார்த்தனர். இருவரும் பள்ளிக் காலத்தில் நட்பு கொண்டது முதல் அவர்களால் ஞாபகப்படுத்த முடிந்த வாழ்க்கையின் அனைத்து நிகழ்வுகளையும் மீண்டும் ஒரு முறை நிகழ்த்திக் காட்டினர் வார்த்தையிலேயே.

"நிறைமதியையும், ஆதவனையும் நம்ம புள்ளைன்னே எல்லாரும் நம்பினாங்க பாருங்க அதான் நாம செய்த சாதனை" என்று ராதா சொல்லவும் தான் திடுக்கிட்டாள் சுபாஷினி. "கல்யாணம் முடிஞ்சதுமே அமெரிக்கா போன நாம, அடுத்த வருசமே யாருக்கும் தெரியாம இந்தியா வந்ததும், அனாதை ஆசிரமம் மூலமா ஒரு மாதப் பிள்ளையான நிறைமதியைத் தத்து எடுத்ததும் மீண்டும் நாம் அமெரிக்கா போனதும், அப்புறம் அடுத்த வருசமே ஆதவனைத் தத்து எடுத்ததும் காதும் காதும் வச்ச மாதிரி சரியா நடந்தது." என்றார் நவீன்,

"இல்லாட்டி போனா, நம்ம அப்பா அம்மாவுக்கு யாரும் பதில் சொல்லியிருக்க முடியாது" என்றார் ராதா. இவர்கள் என்ன பேசிக் கொள்கின்றார்கள். உண்மை தானா இல்லையா என்று கூட சுபாஷினிக்கு சந்தேகம் வந்தது.

"ஆமா. நான் சீக்கிரமா சாகப் போறேனே, உனக்கு வருத்தமா இல்லையா நவீன்?" என்றார் ராதா. மித மிஞ்சிய வருத்தத்துடன் புன்னகைத்த நவீன், "சீக்கிரமே சொர்க்கத்துக்குப் போகப் போறன்னு தான் நினைச்சுப்பேன் ராதா. நீ இல்லாத இந்த உலகத்துல நானும் அதிக நாள் இருக்க மாட்டேன். ரெண்டு பேரும் ஒன்னாவா இங்கே வந்தோம்? ஆனா வாழ்க்கையின் அதிக காலத்தை ஒன்னாவே கழிச்சோம். போகும் போது கொஞ்சம் முன்னே பின்னே போவோம். அவ்ளோ தான்" என்றார். "கவலைப் படாத, சொர்க்கமோ நரகமோ, நான் எங்கே போனாலும் நீயும் அங்கே தான் வரப்போற. உனக்கு முன்னாடியே அங்கே போய் உனக்கும் சேர்த்து இடம் போட்டு வச்சிருப்பேன்" என்றார். "சொல்ல முடியாது. உனக்கு முன்னாடியே நான் போய் சேர்ந்தாலும் சேரலாம். வாழ்க்கையில் எதுவும் எப்பவும் நடக்கலாம்" என்றார் நவீன்.

"நாம எல்லாரையும் போல தாம்பத்திய வாழ்க்கை வாழலியே. உனக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையுறதக் கெடுத்திட்டேனோ?" என்ற ராதாவுக்கு "அசடு அசடு. எத்தனை வருசம் கழிச்சு இதைக் கேக்குற? நாம எதுக்காகக் கல்யாணம் செஞ்சிக்கிட்டோம்? நட்பு கெடக் கூடாதுன்னு தானே? அந்த நட்பை சாகிற வரைக்கும் நாம விட்டுக் கொடுக்கல. அது தாம்பத்தியமா

இருந்தாலும் சரி, காதலா இருந்தாலும் சரி. நாம தோத்துப் போகல. எல்லோரையும் போல தாம்பத்திய வாழ்வு வாழ்ந்திருந்தா மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள்னு நம்ம வாழ்க்கையும் ஆகியிருக்கும். ஆனா, இப்போக் கூட நேத்துத் தான் நாம நட்பு கொள்ள ஆரம்பிச்சது மாதிரி இருக்கு. இப்படி ஒரு நட்புக்காக எதை வேணாலும் விட்டுக் கொடுக்கலாம்னு தோணுச்சு. அதான் நாம நட்பு வாழ்க்கை வாழ ஆரம்பிச்சோம் ராதா. இப்போ நமக்கு என்ன குறைச்சல்? ஆசைக்கு மகள், ஆஸ்திக்கு மகன், அழகான பேத்தின்னு இல்லையா? நமக்குள்ள பெரிசா ஒரு சண்டை சச்சரவு வந்திருக்குமா? ஏதோ இந்த உலகத்துக்கு வந்தோம், ஒரு நல்ல வாழ்க்கை வாழ்ந்தோங்கிற திருப்தி எனக்கு இருக்கு ராதா. அதுக்கு நீ தான் காரணம். என்னோட இத்தனை வருச வாழ்க்கையில நான் எதையுமே இழந்ததா நினைக்கவே இல்ல ராதா. என்னோட வாழ்க்கை பூரா உன்னோட புனிதமான நட்பே அரவணைச்சிக்கிருச்சி. இதோ இப்போ சாகச் சொன்னாக் கூட நான் தயார். சந்தோசமாச் சாவேன்" என்ற நவீனின் பதிலைக் கேட்டு அதிர்ச்சி, ஆச்சரியம் எல்லாம் கொண்டிருந்தாள் சுபாஷினி. எப்படிப்பட்ட வாழ்க்கை வாழ்ந்திருக்கின்றார்கள் இருவரும். இது தெரியாமல் நாம் இவர்கள் மேல் எப்படியெல்லாம் நடந்து கொண்டோம் என்று நொந்து கொண்டாள்.

"அப்போ, சொர்க்கத்துக்குத் தான் போகப் போறேன்னு சொல்ற" என்று அந்த வலியிலும் வழக்கமான கிண்டலுடன் கேட்ட ராதாவுக்கு, "ஆமா. அதிலென்ன சந்தேகம்?" என்றார் நவீன். ராதா கண்ணீருடன், "நான் இங்க வாழ்ந்தத விட சொர்க்கம் சுகமா இருக்குமா நவீன்?" என்றார். நவீனால் பதிலேதும் சொல்ல முடியவில்லை. அது தான் ராதா பேசிய கடைசி பேச்சு. திடீரென நாடித் துடிப்பு குறைய ஆரம்பித்தது. வெளியே கண்ணீருடன் நின்று கொண்டிருந்த சுபாஷினி ஓடி வந்தாள். லக்ஷணாவைப் பார்த்த பின்னும் ஒன்றும் நடக்கவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக ராதா நவீனுக்குள் அடைக்கலமானார். நவீன் அன்று மட்டும் மிகவும் வருத்தத்துடன் காணப்பட்டார். பின்னர் சகஜ வாழ்க்கைக்கு வந்திருந்தார்.

அடையார் வீட்டைக் காலி செய்து விட்டு மகன், மருமகள், பேத்தி அனைவரும் நவீனுடனேயே தங்கியதில் அவருக்கு மிக்க மகிழ்ச்சி. பேத்தியின் உருவில் ராதாவைப் பார்த்தார். சுபாஷினியின் அதிரடி மாற்றம் அவராலேயே நம்ப முடியவில்லை. அனைத்தும் தெரிந்ததாக அவளும் காட்டிக் கொள்ளவில்லை. அவர்கள் வீட்டுக்கு வந்து ஒரு வாரம் இருக்கும். காலை ஈசி சேரில் சாய்ந்து கொண்டு செய்தித் தாள் வாசித்துக் கொண்டிருந்தார் நவீன். லக்ஷணா யாருடனோ அந்தச் சின்ன வயதிலேயே தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தாள். "நான் இல்லாம நீ எங்கேடா போயிருவ?" - இது தான் அவள் பேசியது!

நவீன் நினைத்துக் கொண்டார். இந்தச் சம்சார சாகரத்தின் அலை ஓயாது என்று.

(அலை ஓயாது)